I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.3
OS.NO.22/2022

**Name** : Mathiazhagan
**Father/Husband Name** : Chinnasamy

**Age** : 60

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.11.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்: 12.45 p.m**

**குறுக்கு விசாரணை**

நான் தான் மதியழகன் என்பதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதார் கார்டு கொண்டு வந்துள்ளேன். நான் மூர்த்தி என்பவர் சொல்லி தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அப்படி இல்லை. சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. மூர்த்தி சொல்லிதான் வாக்குமூலத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 14.08.2014 ல் கடன் வாங்கியதாக சொல்வது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அனைத்து பாண்டுகளிலும் முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்களை மூர்த்தி என்பவர் தான் என்னிடம் வந்து வாங்கினாரா என்றால் இல்லை, நான் தான் கையெழுத்து போட்டேன்.

பாலமுருகன், லிங்கமூர்த்தி என்பவர்களுக்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை நடந்த உண்மையை சொல்ல

வந்துள்ளேன். நான் 2 கையெழுத்துக்கள் போட்டேன். எத்தனை முறை கையெழுத்து போட்டேன் என்றால் 2 முறை என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், முதல் 23.07.2020 மற்றொன்று 21.09.2020 அன்று கையெழுத்து போட்டேன்.

இந்த கையெழுத்துக்களை அம்பேத்கார் மண்டபத்தின் எதிரில் மெக்கானிக் கடையில் போட்டேன். எல்லா கையெழுத்துக்களையும் அங்கு தான் போட்டேன் என்றால் ஆம். நான் கையெழுத்து போடுவதற்கு முன்பு அதில் எதுவும் எழுதவில்லை என்றால் சரியல்ல, எழுதிய பிறகு தான் கையெழுத்து போட்டேன். இந்த பாண்டிற்காக 23.07.2020 ல் வரவு வைத்ததை யார் எழுதியது என்றால் நான் எழுதினேன். எந்த பேனாவில் எழுதினேன் என்றால் புளூ மையில் எழுதினேன். ஆனால் கையெழுத்து மட்டும் கருப்பு மையில் போட்டுள்ளேன் என்றால் சரிதான், எழுதும்போது என்னுடைய மையில் எழுதினேன், கையெழுத்து போடும் போது அவர் வைத்திருந்த பேனாவில் போட்டேன்.

இந்த 23.07.2020 பாண்டு வா.சா.ஆ. 1 ல் உள்ள மேற்குறிப்பை படியுங்கள் என்றால் பாண்டிற்காக 23.07.2020 ஆம் தேதி அசலுக்காவும் வட்டிக்காகவும் வரவு வைத்ததாக கண்டுள்ளது, அந்த வரவு வைத்ததில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை.

இந்த 5 பாண்டுகளிலும் புளூ மையில் தான் வரவு வைத்துள்ளேன் என்றால் ஆம். அதே போல் மற்றொரு தேதியில் 4 பாண்டில் நான் தான் புளூ மையில் வரவு வைத்தேன். அனைத்து மேற்குறிப்புகளும் புளூ மையில் தான் எழுதினேன் என்றால் சரிதான். வரவு வைத்ததற்கு கீழ் நான் கையெழுத்து போடவில்லை. அசலுக்காகவும் வட்டிக்காகவும் என்று சொல்லியுள்ள நிலையில் அசல் எவ்வளவு மற்றும் வட்டி எவ்வளவு என்ற

சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது, ஆனால் 2 தேதியிலும் 20,000, 20,000 கொடுத்தார்கள், அதை நான் எழுதினேன். அசல் எவ்வளவு மற்றும் வட்டி எவ்வளவு என்று எனக்கு தெரியாது. அசல் எவ்வளவு வட்டி எவ்வளவு என்று என் எதிரில் பேசினார்கள் ஆனால் நான் எதுவும் கண்டுக்கொள்ளவில்லை. வட்டி எவ்வளவு அசல் எவ்வளவு என்று பேசினார்கள் ஆனால் நான் கண்காணிக்கவில்லை.

என் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் அவர் முதலில் கடன் வாங்கியது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே போல் என் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 2014 ல் கடன் வாங்கியது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் அப்போதும் சொல்லவில்லை இப்போதும் சொல்லவில்லை.

நான் மூர்த்தி என்பவருக்காக வரவு எதுவும் வைக்கவில்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 01.30 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.11.04 18:56:43 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.